117
13 13

சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு – வருவாய்த்தீர்வாயம் (ஜமாபந்தி) முறையை மறுபரிசீலனை செய்தல், மற்றும் கிராமக் கணக்குகளை எளிமைப்படுத்துதல் குறித்து நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் [வ.நி. 1(1)] துறை

அரசாணை (நிலை) எண். 548

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.
(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையை மறு பரிசீலனை செய்தல், கிராமக்கணக்குகளை எளிமைப்படுத்துதல் மற்றும் பராமரிக்கப்படும் படிவங்களை மாற்றி அமைத்தல் குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:–

(i) தற்போது உள்ள வருடாந்திர ஜமாபந்தி நடைமுறையையே தொடர்ந்து பின்பற்றலாம்; திருத்திய வருவாய்த் தீர்வாய சரிபார்த்தல் குறிப்பினை (Modified Jamabandhi check Memo) 1420ம் பசலி ஆண்டு முதல் கடைப்பிடிக்கலாம்;

(ii) கிராமக் கணக்குகளை எளிமைப்படுத்துவது தொடர்பாக, தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டிய கிராம கணக்குகள், நீக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள் மற்றும் திருத்தி அமைக்க வேண்டிய கிராமக் கணக்குகள் பின்வருமாறு:–

அட்டவணை -1
தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

வ.எண்.	கணக்கு எண்.	கிராமக் கணக்கு விவரம் (பின்இணைப்பு IV)
1.	--	'அ' பதிவேடு
2	--	'அ' பதிவேட்டின் உள்ளடக்கம்
3.	1	பயிர் ஆய்வு கணக்கு
4.	1	பயிர் ஆய்வு கணக்கின் சுருக்கம்
5	2	அடங்கல்
6	2C	மரப்பதிவேடு (Tree Register)
7	2D	பாசன ஆதார ரீதியான விபரப்பட்டி (Sourcewise irrigation statement)
8	2F	பல்வேறு வகை நில வகுப்புகளின் பரப்புகளின் விபரப்பட்டி
9	3	பட்டா மாறுதல் (பிரிவு I,II,III, (ம) IV)
10.	4	அரசிறைக் கழிவு விபரப்பட்டி
11.	5 (iii)	நிலவரி தள்ளுபடி கணக்கு [கணக்கு-5 என மாற்றி அமைக்கலாம்].
12	6	முறையற்ற பாசனத்திற்கான தண்ணீர் தீர்வைகள்
13	7	பல்வகை வருவாய்
14.	10(1)	பட்டாவாரியான நிலவரித் திட்டத்தின் சிட்டா
15	13	கிராம வரிவசூல் கணக்கு
16.	14	பட்டாவாரி வசூல் பதிவேடு
17.	15	செலுத்துச்சீட்டுப் பதிவேடு
18.	18	நில வருவாய் ரசீது
19.	19	பிறப்பு/இறப்பு பதிவேடு
20.	20	மழை பொழிவு பதிவேடு
21.	21	கால்நடைப் பதிவேடு
22.	24	சுரங்கங்கள் (ம) கனிமப் பொருட்கள் பதிவேடு
23.	-	கிராம புள்ளியியல் பதிவேடு

அட்டவணை 2
நீக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

வ. எண்	கணக்கு எண்	கிராமக் கணக்கு விவரம்
1.	5(i)	நிலவரி தள்ளுபடி கணக்கு
2.	5(ii)	--
3.	8A/8B	நீர்ப்பாசனக் கணக்கு
4.	9A	கூடுதல் தீர்வை (ம) கூடுதல் தண்ணீர் வரி கணக்குக்கு
5.	11	பட்டா படிவம்
6.	-	நன்செய் புன்செய் கழிவு கணக்கு
7.	16	கிஸ்திபந்தி அறிக்கை
8.	17	நில வருவாய் வட்டிப்பதிவேடு
9.	23	பலவகை கைப்பற்றுகளின் எண்ணிக்கை பதிவேடு

15 15 119

அட்டவணை -3
திருத்தி அமைக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

வ.எண்.	கணக்கு எண்.	கிராமக் கணக்கு விவரம்
1	10 (II)	பட்டாவாரியாக விதிக்கப்படவேண்டிய தீர்வைப் பதிவேடு
2	12	கிராம நில வருவாய் சுருக்கப்பட்டி

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று, பொது நலன் கருதி, திருத்தியமைக்கப்பட்ட கணக்கு நடைமுறைகளுடன் வருவாய்த்தீர்வாயம் (ஜமாபந்தி) முறையை தொடர வேண்டும் எனவும்; பின்வரும் அட்டவணை 1-ல் கண்டுள்ள கிராமக் கணக்குகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்றும்; அட்டவணை 2-ல் கண்டுள்ள கிராமக் கணக்குகளை நீக்கம் செய்தும்; அட்டவணை 3-ல் கண்டுள்ள கிராமக் கணக்குகளை உரிய திருத்தம் செய்ய அனுமதித்தும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

அட்டவணை -1
தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

வ.எண்.	கணக்கு எண்.	கிராமக் கணக்கு விவரம் (பின்இணைப்பு IV)
1.	--	'அ' பதிவேடு
2	--	'அ' பதிவேட்டின் உள்ளடக்கம்
3.	1	பயிர் ஆய்வு கணக்கு
4.	1	பயிர் ஆய்வு கணக்கின் சுருக்கம்
5	2	அடங்கல்
6	2C	மரப்பதிவேடு (Tree Register)
7	2D	பாசன ஆதார ரீதியான விவரப்பட்டி (Sourcewise irrigation statement)
8	2F	பல்வேறு வகை நில வகுப்புகளின் பரப்புகளின் விவரப்பட்டி
9	3	பட்டா மாறுதல் (பிரிவு I,II,III, (ம) IV)
10.	4	அரசிறைக் கழிவு விவரப்பட்டி
11.	5 (iii)	நிலவரி தள்ளுபடி கணக்கு [கணக்கு-5 என மாற்றி அமைக்க வேண்டும்].
12	6	முறையற்ற பாசனத்திற்கான தண்ணீர் தீர்வைகள்
13	7	பல்வகை வருவாய்
14.	10(1)	பட்டாவாரியான நிலவரித் திட்டத்தின் சிட்டா
15	13	கிராம வரிவசூல் கணக்கு
16.	14	பட்டாவாரியான வசூல் பதிவேடு 14 C உட்பட
17.	15	செலுத்துச்சீட்டுப் பதிவேடு
18.	17	நிலவருவாய் வட்டி பதிவேடு
19.	18	நிலவருவாய் ரசீது
20.	19	பிறப்பு இறப்பு பதிவேடு
21.	20	மழை பொழிவு பதிவேடு
22.	21	கால்நடைப் பதிவேடு
23.	24	சுரங்கங்கள் மற்றும் கனிமப்பொருட்கள் பதிவேடு
24	-	கிராம புள்ளியியல் பதிவேடு

அட்டவணை 2
நீக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

வ. எண்	கணக்கு எண்	கிராமக் கணக்கு விவரம்
1.	5(i)	நிலவரி தள்ளுபடி கணக்கு
2.	5(ii)	––
3.	8A/8B	நீர்ப்பாசனக் கணக்கு
4.	9A	கூடுதல் தீர்வை (ம) கூடுதல் தண்ணீர் வரி கணக்குக்கு
5.	11	பட்டா படிவம்
6.	–	நன்செய் புன்செய் கழிவு கணக்கு
7.	16	கிஸ்திபந்தி அறிக்கை
8.	23	பயிரிடுவோர் பதிவேடு (சரகம்)

அட்டவணை –3
திருத்தி அமைக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

வ.எண்.	கணக்கு எண்.	கிராமக் கணக்கு விவரம்
1	10 (II)	பட்டாதாரர் பதிவேடு
2	12	கிராம கேட்பு (Demand) சுருக்கம்
3.	–	வருவாய்த் தீர்வாய சரிபார்த்தல் குறிப்பு

4. மேற்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்ட கிராமக் கணக்குகளை 1420ம் பசலி ஆண்டு (2010–11) முதல் செயல்படுத்திட ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.
நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.

நிதித்துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.